1992 ஏப்ரல் 24]

(இ) மனுக்கள் குழு,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன்' மனுக்கள் குழுவின் தலைவர்,

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 9-வது, 10-வது மற்றும் 11-வது அறிக்கைகளை இப் பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்கு பதிலாக படி எடுத்த பிரதிகள் சட்ட மன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைக்கப் பெற்றவுடன் அறிக்கைகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க (ஆம்).

மறுப்போர் இல்லை என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க (ஆம்).

மறுப்போர் இல்லை என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன் . . (குறுக்கீடு).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.